**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 135/2019**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 26.11.2025 | | |
| பெயர்: | ராஜாராம் (DW–1 Cross con) | தகப்பனார் பெயர்: | கோவிந்தராஜ் |
| கிராமம்: | வில்வராயன்நத்தம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | Retd.TNCSC | வயது : | 66/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 26.11.2025</u>**
**(ஆரம்பித்த நேரம்–13.05)**

1. பி.வா.சா.ஆ.1 ஆனது எனது தாயாருக்கு நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்துடன் B memo இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். B memo என்பது அரசாங்க நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருப்பவர்களுக்கு கொடுக்கக்கூடிய தண்டத்தீர்வைக்கான அறிவிப்பு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புல எண் 68/23ல் எனது தாயார் கூரை வீடு கட்டி தனியாக வசித்து வந்தார் என்றால் சரிதான். அதற்காக பி.வா.சா.ஆ.3 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. மனை எண் 68/23, 68/24, 68/25 ஆகியவை எங்களது குடும்பத்திற்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தெற்கு பக்கம் மனையாக பிரிக்கப்படுவதற்கு முன்பு காலியிடமாக இருந்தது என்றால் சரிதான். அதில் 68/33 மனையை எனது தாயாருக்கு நில ஒப்படைவு பத்திரம் மூலம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆக

ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் கையெழுத்து இடும் இடத்தில் வட்டாட்சியர், சீர்காழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. மனை எண். 68/32, 68/33, 68/34, 68/35 ஆகியவை காலி மனையாக இருக்கிறதென்றால் 68/33ல் வீடு உள்ளது, 68/35ல் ஏற்கனவே வீடு இருந்து தற்போது மாட்டுக் கொட்டகையாக உள்ளது. 68/34 காலி மனை என்றால் சரிதான். 68/33 மற்றும் 68/35ல் வீடோ, மாட்டுக் கொட்டகையோ இருக்கிறது என்பதற்காக ஆவணங்கள் ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. 68/33 மனை ஒப்படைவு செய்யப்பட்டது சம்மந்தமாக அரசுக்கு தொகை செலுத்தப்பட்டுள்ளதா என்றால் அரசு எங்களிடம் கேட்கவில்லை, நான் செலுத்தவில்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணம் வழக்கிற்கு பிறகு 23.08.2000ல் வட்டாட்சியரால் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மைத்துனர் வீரமணி என்பவர் துணை வட்டாட்சியராக சீர்காழியில் 2000 வருடத்தில் பணிபுரிந்தார் என்றால் 2000 வருடத்தில் அவர் மயிலாடுதுறையில் வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்தார். அவர் எப்போது துணை வட்டாட்சியராக பதவி உயர்வு பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

5. ஏற்கனவே மனை எண் 68/23ஐ எனது தாயார் செல்லம்மாளுக்கு பட்டா கொடுக்கப்பட்டு வீடு கட்டி வசித்து வரும் நிலையில் மனை எண் 68/33 மனை ஒப்படைப்பு என்பது எனது மைத்துனரின் செல்வாக்கால் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 என்பது மனை இல்லாதவர்களுக்கு கொடுக்கப்படும் ஆவணம் என்றால் சரியல்ல. சர்வேயர் அறிக்கையில் (நீ.ம.சா.ஆ.4) மனை எண் 68/35ல் மேற்கு பக்கத்தில் சிறு கொட்டகை 5 ச.மீ க்கு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

6. 68/34, 68/35 ஆகியவை சம்மந்தத்திற்கு கொடுக்கப்பட்டது என்றாலும் அவற்றை நான் ஆக்கிரமித்துள்ளேன் என்றாலும் சரியல்ல. சம்மந்தத்திடம் நான் மேற்படி நிலத்தை விற்பனைக்கு கேட்டு அவர் என்னிடம் கொடுக்காமல்

வாதியிடம் விற்பனை செய்ததால் சம்மந்தத்தின் மீதும் வாதியின் மீதும் எனக்கு முன்விரோதம் உண்டு என்றால் சரியல்ல. வாதி கிரயம் வாங்கிய பிறகு அதே வருடத்தில் 28.05.2019ல் மனை எண் 68/34, 68/35 ஐ சுற்றி எனது செல்வாக்கால் வேலி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. 68/34ல் வாதியின் மின் மோட்டார் உள்ளதையும் சேர்த்து நான் வேலி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் வாதி என் மீது 28.05.2019ல் சீர்காழி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல . மனை எண் 68/34, 68/35 வழியாகத்தான் வாதி அதற்கு தெற்கே உள்ள அவரது வயலுக்கு தேவையான விவசாய பொருட்களை எடுத்து சென்றார் என்றால் சரியல்ல. வாதி சிறுபான்மையினர் என்பதாலும் நாங்கள் பெரும்பான்மையினர் என்பதாலும் அவரது சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயல்பட்டோம் என்றால் சரியல்ல.

8. எனக்கு அரசியல் செல்வாக்குள்ள காரணத்தால்தான் நான் சட்டத்திற்கு புறம்பாக காரியங்கள் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 68/35ல் உள்ளது மாட்டுக்கொட்டகை இல்லை என்றாலும், அது அவரைக்காய் பந்தல் என்றாலும் சரியல்ல. வாதி வாங்கிய 68/34, 68/35 மனைகள் நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் சம்மந்தத்திற்கு கொடுக்கப்பட்ட பட்டாக்கள் என்றாலும் அது ஆதிதிராவிட நலத்துறையால் ஒப்படைவு செய்யப்பட்டதல்ல என்றாலும் சரியல்ல.

9. தாவா சொத்துக்கள் 2000 முதல் எனது தாயார் வசம் இருந்ததாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வாதி கோரியபடி தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 13.32)**